ஒட்டு மொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் - தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

தருமபுரி நிகழ்ச்சியில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

தருமபுரி, செப் 27-

தருமபுரியில் நேற்று, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான வங்கிப் பற்று அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கி உரையாற்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒட்டுமொத்த இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில், தமிழ்நாட்டில் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 500 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 பெறுவதற்கான வங்கிப் பற்று அட்டைகளை நேற்று (26.09.2023) தருமபுரி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணுக்கிங்கே பெண் நிகர்" என்னும் சமத்துவப் பாதையில் பெண்களின் முன்னேற்றத்திற்கென எண்ணற்ற திட்டங்களை அறிவித்து, அவற்றை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வாழ்வாதாரத்தை முன்னேற்றவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கிடும் அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமாகவும், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், ஒட்டுமொத்த இந்தியாவும் திரும்பி பார்க்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

தற்போது தருமபுரி மாவட்டத்தில் இவ்விழாவின் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், 500 பயனாளிகளுக்கு இன்றைய தினம் வங்கிப் பற்று அட்டைகள் வழங்கப்படவுள்ளது. இத்தருமபுரி மாவட்டத்தில் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களை முதன்முதலில் தொடங்கிவைத்தார். தற்போது நமது முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாமினை இத்தருமபுரி மாவட்டத்தில் தான் தொடங்கி வைத்தார்கள். தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது.

இம்மாபெரும் திட்டத்தைப் பின்பற்றி அண்டை மாநிலங்களான தெலுங்கானா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படுவது குறித்தான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு

வருகின்றன. பெண்களின் முன்னேற்றத்திற்கென முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை தொடர்ந்து தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

பெண்களின் முட்டுக்கட்டைகளை அகற்றும் அரசு!

தந்தை பெரியார் அவர்கள் பெண்ணுரிமை மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் என்ன என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். பெண்கள் முன்னேற்றத்துக்கான அந்த முட்டுக்கட்டைகளை நம்முடைய அரசு எப்படி அகற்றி வருகிறது என்பதை இங்கு சொல்ல விரும்புகின்றேன்.

பெண்கள் முன்னேற்றம் கலாச்சார ரீதியாக, சட்ட ரீதியாக, பொருளாதார ரீதியாக என மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதோடு, முன்னேற்றமடைய முடியும் என்று தந்தை பெரியார் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் பணக்காரர்-ஏழை அடிமைத்தனத்தை விட, மேல் ஜாதி-கீழ் ஜாதி என்ற அடிமைத்தனத்தை விட, மிகவும் மோசமானது ஆண், பெண் அடிமைத்தனத்தை கலாச்சார ரீதியான தடை என்று சொல்லியிருக்கிறார்கள். பெண் அடிமைத்தனமான பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது, படிக்கக் கூடாது, வேலைக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடுகளை நீக்கி அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்து சென்றது முதலமைச்சர் தலைமையிலான அரசாகும்.

இரண்டாவதாக பெண்களுக்கு இருந்த சட்டரீதியான தடை என்பது, ஒரு தாய் வயிற்றிலே பிறந்தாலும் தந்தையுடைய சொத்தில், பாட்டனார் சொத்தில் பெண்களுக்கு உரிமை இல்லை என்ற நிலை. இந்நிலையை மாற்றும் விதமாக, பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு என்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக இன்றைக்கு எல்லாப் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை கிடைத்திருக்கின்றது.

ஆண்களுக்கு சமமாக பெண்கள்!

அடுத்ததாக பொருளாதார ரீதியான தடை என்பது ஒரு பெண் சிறுமியாக இருக்கும் பொழுது பொருளாதார ரீதியாக, பணத்திற்காக தனது அப்பா, அம்மாவை எதிர்பார்க்க வேண்டும். அந்த பெண் வளர்ந்து பணத்திற்காக கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண், வயது முதிர்ந்த காலத்தில்தனதுமகனையோ,பேரனையோ எதிர்பார்த்திருக்கும் நிலைம. இந்த நிலைமையை மாற்றி பெண்களும் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால், ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்று, தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையில் சேர வேண்டும்.

எனவேதான் நமது முதலமைச்சர் தலைமையிலான அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றது. 'புதுமைப் பெண்' திட்டத்தின் மூலம் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் மாணவியருக்கு மாதம் ரூபாய் ஆயிரம் அவர்களுடைய வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. பெண்கள் படிப்பதற்காக அல்லது வேலைக்காக பயணம் செய்வதற்கு மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், வேலைக்கு செல்லக்கூடிய பெண்களுடைய சிரமத்தை குறைக்கக்கூடிய வகையில் 1 முதல் 5-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்குமுதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவது மிக முக்கியமானது ஆகும். இத்திடத்தின் கீழ் 31,000 பள்ளிகளில், 17 மாணவ, மாணவியர்கள் பயனடைகின்றனர்.

பெண்களின் உழைப்பிற்கு அங்கீகாரம்!

இத்திட்டத்திற்கெல்லாம் முதன்மையான திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் உள்ளது. இந்தத் திட்டத்திற்கு நம்முடைய தமிழ்நாடு இது உதவித்தொகை அல்ல. மகளிருக்கு கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய உரிமைத்தொகை. ஒரு அண்ணனாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருந்து பெண்களுடைய உழைப்பிற்கு இத்திட்டத்தின் மூலம் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

பெண்கள் கல்வி கற்று பொருளாதாரத்தில் உயர வேண்டும். அதே போல், பொது வாழ்க்கையிலும் ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான், உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும். உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீத பெண்கள் வந்திருக்கிறார்கள். சென்னை மேயர், தாம்பரம் மேயர், கோயம்புத்தூர் மேயர் என்று உயர் பதவி எல்லாம் பெண்கள் வந்திருக்கின்றார்கள்.

பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக இருப்பது தான் பெண்ணுரிமைக்கான அடித்தளம். இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கின்றேன். தந்தை பெரியார் அவர்கள் சொன்னதுதான், மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காக சிந்திக்க வேண்டும், சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும், படிக்க வேண்டும், அரசியலில் ஈடுபட வேண்டும், பகுத்தறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான், உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும், முற்போக்காக, சுதந்திரமாகச் சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். இதன்மூலம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் முன்னேற முடியும்.

ஆண்களை விட பெண்கள்தான் தங்களுடைய வருமானத்தில் பெரும் பகுதியை தங்களுடைய குடும்பத்திற்காக சேமிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். எனவே கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகள் அனைவரும் இத்திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வில் மென்மேலும் முன்னேற்றமடைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் முனைவர் பழனியப்பன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதல்வரின் உத்தரவுப்படி - விரைவாக

சென்னை மாநகரில் நடைபெறும் சாலைகள் சீரமைப்புப் பணி விவரங்கள்!

மண்டலம் வாரியாக நடைபெறுகிறது!

சென்னை, செப். 27 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19-09-2023 அன்று நடைபெற்ற வடகிழக்கு பருவ மழை ஆய்வுக்கூட்டத்தின் போதும், 21-09-2023 அன்று நடைபெற்ற களஆய்வின் போதும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சாலைப் பணிகளை விரைந்து மற்றும் தரமாக முடிக்கவும், தலைமைச் செயலாளர் தலைமையில் அவ்வப்போது ஆய்வுக்கூட்டம் நடத்தி கண்காணிக்கவும் அறிவுறுத்தினார். அதனடிப்படையில், தலைமை செயலாளர் 22-09-2023 அன்று சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகள் குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம், நெடுஞ்சாலை துறை மற்றும் சேவைத் துறைகளிடம் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் முதலமைச்சரின் செயலர்1 / கூடுதல் தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சியின் கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து) முதன்மைச் செயலாளர்/ மேலாண்மை இயக்குநர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர், இணை ஆணையர் (பணிகள்) மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

தலைமைச் செயலாளர் மண்டலம் வாரியாக சேவை துறையில் மேற்கொண்டுவரும் சாலை வெட்டு பணிகள் குறித்தும், சென்னை குடிநீர் வாரியம் சாலை வெட்டு முடிக்கப்பட்ட இடங்களில் சாலைகளை சீரமைக்கவும், புதிய சாலைகளை புனரமைக்கவும் அறிவுறுத்தினார்கள். மேலும், சாலை வெட்டுகளில் உள்ள ஒட்டுப்பணிகளை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார். மேலும், சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்க மண்டல வாரியாக குறுகிய கால ஒப்பந்தம் மூலம் சாலை பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். இப்பணிகளுக்கு பரப்பளவு அடிப்படையில் அல்லாமல், கொள்ளளவு அடிப்படையில், தேவைக்கேற்ப உடனடியாக ஒப்பந்தபுள்ளிகள் கோரவும், இறுதி செய்யவும், பணிகளை விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

குறிப்பாக மண்டலம்2, 7, 11, 12 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் அதிகளவில் சாலை வெட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், மேற்கண்ட முறையில் ஒப்பந்தபுள்ளிகள் கோரி, பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார். சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் சாலை வெட்டுக்கள் முடிக்கப்பட உள்ள இடங்களில் சீரமைக்கப்படவுள்ள 140 சாலைகளிலும் மற்றும் சாலை வெட்டு சீரமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் 277 சாலைகளிலும் துரிதமாக அக்டோபர் 10க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் துவங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை வெட்டு பணிகளை 30.09.2023க்குள் முடிக்க அறிவுறுத்தினார்கள். இது தவிர வேறு எந்த சாலை வெட்டுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார்கள். மேலும், சாலை பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடிக்க ஏதுவாக தொழில் நுட்ப உதவியாளர்கள் அல்லது PMC மூலமாக பணியாளர்களை நியமிக்கவும், பணிகளை விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

சாலை வெட்டுகள் சீரமைப்பு!

இதுவரை மேற்கொள்ளப்பட்ட சாலை வெட்டுகளை முறையாக சீரமைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் மற்றும் வட்டார துறை ஆணையர்கள், மண்டல அலுவலர்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் பகுதிப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்களுடன் ஆலோசித்து ஒவ்வொரு சாலை வாரியாக மைக்ரோ மேனேஜ்மெண்ட (Micro Management) முறையில் பணிகளை முடிக்க சரியான கால கெடுவை நிர்ணயம் செய்யவும் அறிவுறுத்தினார். அவ்வாறு சாலை வெட்டு பணிகள் முடிக்கப்படும் இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி போர்க்கால அடிப்படையில் சாலைகளை சீரமைத்து, சாலை பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

கலைஞர் நகர் அண்ணா பிரதான சாலையில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தற்போது 75 சதவீத பணிகளை முடித்துள்ளது என்றும், மீதமுள்ள பணிகள் வடகிழக்கு பருவ மழைக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர். இந்த சாலையில், சேவைத் துறையினரால் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுவதால் தலைமைச் செயலாளர் அவர்கள் இச்சாலையினை சிறந்த முறையில் சீரமைக்க அறிவுறுத்தினார். மண்டலம்2, நெடுஞ்செழியன் சாலையில் மீதமுள்ள சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 100 மீட்டர் பணிகளை 30.09.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

பாடசாலை தெருவில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதால், சாலை வெட்டு சீரமைப்புப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார். பார்த்தசாரதி சாலையில் பணிகள் முடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டால் இச்சாலையிலும் சாலை வெட்டு சீரமைப்புப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

அனைத்து பேருந்து தட சாலைகளிலும் சாலை வெட்டுகளை சீரமைக்கும் பணி அக்டோபர் முதல் வாரத்திற்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார். நியு ஆவடி சாலையில் தமிழ்நாடு மின் பகிர்மான சாலை வெட்டு பணிகள் முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டதால் இச்சாலை வெட்டு சீரமைப்புப் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் விரைந்துமுடிக்குமாறு அறிவுறுத்தினார். அயனாவரம் சாலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் குழாய் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக தெரிவித்ததால் அச்சாலையில் சாலை வெட்டுகள் சீரமைப்புப் பணி பெருநகர சென்னை மாநகராட்சியால் விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார். பெருநகர சென்னை மாநகராட்சியால் சாலை வெட்டு சீரமைக்கும் பணி மேற்கொள்ளும் போது, போக்குவரத்து இடையூறு சம்பந்தமாக ஏற்படும் இடையூறை, போக்குவரத்து துறை சாலை வேண்டுமென்றும், பணிகளை விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

வடகிழக்கு பருவமழை முடியும் காலம் வரை புதிய சாலை வெட்டு அனுமதி வழங்க வேண்டாம் என அறிவுறுத்தினார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி தினமும் சாலை பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களின் விவரத்தினை சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறையினருக்கு வழங்கவும், அதனடிப்படையில் தார் கலவை லாரி மற்றும் இதர சாலை சீர் அமைக்கும் பணிக்கு கொண்டுவரும் வாகனங்களுக்கு பகல் நேரங்களில் போக்குவரத்து துறையில் அனுமதி அளிக்குமாறும் மற்றும் பணிகளை விரைந்து முடிக்க ஒத்துழைப்பு அளிக்குமாறும் சாலை பணிகளை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார்.

கூடுதல் தலைமை செயலாளர் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்கள் நெடுஞ்சாலை துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்த விவரங்களை தெரிவித்தார். 100 அடி உள்வட்ட சாலையில் (Torrent Gas) மேற்கொண்ட சாலைவெட்டு பணிகள் முடிவுடைந்ததாகவும், சாலை பணி சீர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 30.9.2023 முடிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஈ.வே.ரெ. பெரியார் சாலையில் சென்னை குடிநீர் வாரியம், கழிவு நீர் குழாய் அமைக்கும் பணிகள் 25.09.2023 முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். இவ்விடங்களில் நெடுஞ்சாலை துறையினர், 30.09.2023க்குள் சாலை சீரமைக்கும் பணி மேற்கொண்டு முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

உள்வட்ட சாலையில் பாடி மேம்பாலம் முதல் மாதவரம் ரவுண்டானா வரை 2.1 கி.மீ. பணிகள் முடிக்கப்பட்டதாக தெரிவித்தார். தலைமைச் செயலாளர், சென்னை குடிநீர் வாரியம், சாலைவெட்டு சீரமைப்பு பணிக்கு செலுத்தவேண்டிய தொகை தாமதம் ஆவதால், நெடுஞ்சாலை துறையினர், தங்களது நிதியில் சாலைவெட்டு சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு, சாலை பணிகளை விரைந்து முடிக்குமாறும், பின்னர் சென்னை குடிநீர் வாரியத் திடமிருந்து பணம் திரும்ப பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்கள்.

எருக்கஞ்சேரி சாலையில் மூலக்கடை சந்திப்பு முதல் மாதவரம் ரவுண்டானா வரை மேற்கொள்ளப்படும் சாலை பணிகள் 30.09.2023 முடிக்குமாறு அறிவுறுத்தினார். வேளச்சேரி பிரதான சாலையில் விஜய நகர் சந்திப்பு அருகில் சென்னை குடிநீர் வாரியம் (Testing of Water line) பணிகளை 25.9.2023க்குள் முடிக்குமாறும் சாலைபணிகளை 30.09.2023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

தரமான முறையில் சாலைகள்!

சென்னை திருத்தணி நெடுஞ்சாலை, பாடி அருகில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தையும் 30.9.2023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

மணப்பாக்கம் பகுதியில் சென்னை குடிநீர் வாரியம் பணிகளை விரைந்து முடிக்குமாறும், முடிக்கப்பட்ட இடங்களில் சாலை பணிகளை விரைந்து முடிக்குமாறும் அறிவுறுத்தினார்கள். மவுண்ட் பூந்தமல்லி சாலையில் சாலை பணிகளை 30.09.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

நீர்வளத்துறையினரிடம் மதனந்தபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும், நெடுஞ்சாலை துறையினர் முடிக்கக்கப்பட்ட இடங்களில் சாலை சீரமைக்கும் பணியினை 30.09.2023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தி னார்கள். முகலிவாக்கம் பகுதியில் சென்னை குடிநீர் வாரியம் குழாய் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்குமாறும், முடிக்கப்பட்ட இடங்களில் சாலை பணிகளை 30.09.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

கூடுதல் தலைமைச் செயலாளர், மின்பகிர்மான கழகம், அண்ணாசாலை கத்திபாரா அருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் 30.09.2023க்குள் முடிக்கப்படும் என தெரிவித்தார்கள். தலைமைச் செயலாளர் இப்பகுதியில் சாலை சீரமைக்கும் பணியினை மேற்கொண்டு 15.10.2023க்குள் பணிகளை முடிக்குமாறும் அறிவுறுத்தினார். தலைமைச் செயலாளர் CMRL நிறுவனம், மவுண்ட் பூந்தமல்லி சாலையில், இராமாபுரம், DLF, பகுதிகளில் சாலை சீர் அமைக்கும் பணியினை 30.09.2023க்குள் முடிக்கு மாறும் அறிவுறுத்தினார்.

மேலும், ஆற்காடு சாலையில், சீரமைக்கும் பணிகளை 30.09.2023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்கள். OMR சாலையிலும் சாலை சீர் அமைக்கும் பணிகளை 30.092023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

நெடுஞ்சாலை துறையினரிடம் ECR சாலையில், கொட்டிவாக்கம், திருவான்மியூர், ஈஞ்சம்பாக்கம் ஆகிய பகுதிகளில், சாலை விரிவாக்க பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்கள். தலைமைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மேற்கொண்டு வரும் சாலை பணிகளை 15.10.2023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தினார்.

இறுதியாக தலைமைச் செயலர், சாலை வெட்டு சீர் அமைக்கும் பணி, புதிய சாலைகள் அமைக்கும் பணிகளை விரைவாக முடிக்குமாறும், தரமான முறையில் அமைக்கவும் அறிவுறுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைவிடப்பட்ட வாகனங்களை அகற்றுவது மற்றும் வாகன நிறுத்த மேலாண்மை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (26.09.2023) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, வட்டார துணைஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்), எம்.பி.அமித், (தெற்கு), தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 1கோடியே19.60 லட்சம் மதிப்பிட்டில் 8000 லீட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் உறுஞ்சும் மற்றும் அடைப்புகளை நீக்கும் ஜெட்ராடிங் இயந்திர 2 வாகனங்களை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கொடி அசைத்து துவக்கி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர ஆணையர் தர்ப்பகராஜ், ஆவடி மேயர் ஜி. உதயக்குமார், பகுதி செயலாளர் மண்டல குழு தலைவருமான ஜி. ராஜேந்திரன், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், நாராயண பிரசாத், பொன் விஜயன் மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, அமுதா பேபிசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.